செப்டம்பர் 22-28

மனன வசனம்

பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும். அப்போஸ்தலர் 27:24.

ஆராய்ச்சிக்கு

*அப்போஸ்தலர் 27; அப்போஸ்தலர் 28; ரோமர் 1:18-20.*

செப் 22 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

பாடம் 13

# ரோமுக்குச் செல்லுதல்



ரோமுக்குச் செல்லவேண்டும் என்பது பவுலின் நீண்டநாள் ஆசை; ஆனால் எருசலேமில் அவரைக் கைதுசெய்ததால், அத்திட்டம் தடைபடுகிறது. எருசலேம் தலைவர்கள் சட்டரீதியாக அவரை எதிர்த்ததால் சுமார் ஐந்து வருடங்கள் ஒரு ரோமக் கைதியாகவே நாட்களைக் கழிக்கிறார். அதில், இத்தாலிக்கு அவர் கடல்மார்க்கமாக அனுப்பப்பட்ட நாட்களும் உண்டு. இதனால் அவருடைய ஊழியப்பணித் திட்டங்கள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன.

பின்னடைவு ஏற்பட்டாலும், அப்போஸ்தலன் ரோமிலும் தம்மைக் குறித்துச் சாட்சி அறிவிக்கவேண்டும் என்று இயேசுதாமே கூறுகிறார். அப் 23:11. இயேசு சொல்கிறபடி நாம் நடக்காதபோது, அதற்கான விளைவுகளைச் சந்திக்க அவர் அனுமதிக்கலாம்; ஆனாலும், இரண்டாவது ஒரு வாய்ப்பையும் தேவன் நமக்குக் கொடுக்கக்கூடும். ஒரு சிறைக்கைதியாக பவுல் ரோமுக்குக் கொண்டுசெல்லப்படுகிறார்; ஆனால் அவர் ஆசைப்பட்டதுபோல, ஸ்பானியா தேசத்திற்கு அவர் செல்லவில்லை. ரோமர் 15:24. அந்த முதல் ரோமச் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார்; ஆனால், மீண்டும் அவர் கைது செய்யப்பட்ட போதுதான், கி.பி. 67இல் நீரோ மன்னனின் கட்டளையால் இரத்தச்சாட்சியாக மரிக்கவேண்டியதாயிற்று.

பவுல் ரோமுக்குச் சென்றுவிட்டார்; இராயனுக்கு முன்பாகவிசாரிக்கப்படும்படி வீட்டுக்காவலில் இருந்தபோது, தான் கட்டுண்ட நிலையில் இருந்தாலும், இராயனுடைய அரண்மனையிலிருந்து வந்த முக்கியஸ்தர்கள் உட்பட அனைவரிடமும் தடையின்றி சத்தியத்தைச் சொன்னார். எபே 6:20; பிலி 1:13; 4:22; அப் 28:30,31.

*2018, செப்டம்பர் 29 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

ஞாயிறு, செப்டம்பர் 23

## ரோமுக்குக் கப்பல் பயணம்

சுமார் இரண்டு வருட காலமாக பவுல் சிசெரியாவில் சிறைக்காவலில் இருந்தார். அப் 24:27. பிறகு அவரை ரோமுக்கு அனுப்புகிறார்கள். அந்தச் சம்பவத்தை முதலாம் நபர் பன்மையில் லூக்கா சொல்கிறார்; மேலும், இத்தாலிக்குச் செல்லும் வழியில் கடலில் என்னவெல்லாம் நடந்ததென விரிவாகச் சொல்கிறார். அப் 27:1-28:16. எனவே அப்பயணத்தில் லூக்காவும் அரிஸ்தர்க்கு என்கிற ஒரு கிறிஸ்தவரும் உடன்சென்றது புரிகிறது. அப் 27:2. இவர்களில் யூலியு என்கிற ரோம நூற்றுக்கதிபதியும் முக்கியமான நபர்; வேறு சில சிறைக்கைதிகளும் யூலியுவின் பொறுப்பில் அனுப்பப்பட்டார்கள். அப் 27:1.

கோடைக் காலத்தில் அவர்கள் புறப்பட்டார்கள். உபவாச நாள் என்பது அக்டோபர் மாதத்தில் பின்பகுதியில் வருகிற பாவநிவாரண நாளைக் குறிப்பிடுகிறது. அப் 27:9. மழைக்காலமானபடியால், நவம்பர்முதல் மார்ச்வரை மத்தியத்தரைக்கடல் பகுதியில் பொதுவாக யாரும் பயணம்செய்யமாட் டார்கள். இங்கே பயணத்தை ஆரம்பித்ததிலிருந்தே பிரச்சனைதான். வெகு நாட்களைக்கு பிறகுதான் கிரேத்தாத் தீவில் உள்ள நல்ல துறைமுகம் என்கிற சிறிய வளைகுடாவை அடைந்தார்கள். அப் 27:8.

**நல்ல துறைமுகத்தில் பவுல் சொன்ன ஆலோசனை என்ன? அப் 27:9–12. அவருடைய ஆலோசனையை எவ்வளவு தூரம் ஏற்றுக்கொண்டார்கள்?**

பவுலின் ஆலோசனைக்குச் செவிகொடுக்கவில்லை; மேற்குநோக்கி மேலும் 40 மைல்கள் பயணித்து பேனிக்ஸ் துறைமுகத்தை அடைந்துவிட்டால், மழைக்காலத்தில் பத்திரமாக இருக்கலாமென நினைத்தார்கள். ஆனால் திடீரென சீதோஷ்ண நிலை மாறுகிறது; சூறாவளி வீசுகிறது; நிலப்பகுதியிலிருந்து தென்மேற்கு திசையில் கப்பலை காற்று இழுத்துச் செல்லுகிறது. கப்பலில் தண்ணீர் பெருக ஆரம்பிக்கிறது. என்ன செய்வதென்று தெரியாமல் கப்பலிலிருந்து சரக்குகளையும் கப்பல் தளவாடங்கள் சிலவற்றையும் கடலில் எறிகிறார்கள். சூழ்நிலை தலைகீழாக மாறிவிடுகிறது. வெளிச்சமில்லை; பாதை தெரியவில்லை; மழைகொட்டியது; காற்று அகோரமாக வீசியது; எந்த இடத்தில் இருக்கிறோம் என்பது தெரியவில்லை; எனவே, முற்றிலும் களைத்துப்போனவர்களாக ‘ இனி தப்பிப்பிழைப்போமென்னும் நம்பிக்கை முழுமையும்’ அவர்களுக்கு அற்றுப்போயிற்று. அப் 27:20.

**இரண்டாவதாக பவுல் சொன்ன ஆலோசனை என்ன? அப் 27:21–26.**

தீர்க்கதரிசன ரீதியாகச் சொன்னால், தேவன் தன்னிடம் சொன்னதை பவுல் அவர்களுக்குச் சொன்னார். ‘‘யாரும் நம்பிக்கையிழக்கத் தேவையில்லை. ஆபத்துகளும் மற்ற இழப்புகளும் நேரிட்டாலும்கூட, யாருடைய உயிருக்கும் சேதம் உண்டாகப்போவதில்லை’’ என்றார்.

தேவனுடைய அர்ப்பணிப்புமிக்க, உண்மையுள்ள ஒரு ஊழியக்காரர் பவுல். அப்படியிருந்து அவருக்கு ஏன் இத்தனைப் பாடுகள்? அவருடைய அனுபவங்களிலிருந்து நாம் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்?

## கப்பல் உடைந்தது

கப்பலில் மொத்தம் 276 பேர் இருந்தார்கள். அப் 27:37. ஏற்பட்டிருந்த இன்னல்களைத் தவிர்க்க இயலாமல் போனாலும், யாருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படாது என்று பவுல் கூறினார். ஆனால், கப்பல் சேதமடையும். அப் 27:22. பதினான்கு நாட்களுக்கு பிறகு அப்போஸ்தலன் சொன்னபடியே நடந்தது. காற்றின் பயங்கர வேகத்தால் திசைதெரியாமல் கப்பல் இழுத்துச்செல்லப்பட்டது; ஆனாலும் அருகாமையிலேயே ஒரு நிலப்பகுதி இருந்ததை எல்லாரும் உணர்ந்தார்கள்; அலைகள் கரையில் மோதுகிற சத்தத்தை வைத்து அவர்கள் கண்டுபிடித்திருக்கலாம். அப் 27:27. பல விதமான சத்தங்கள் தொடர்ந்து கேட்கின்றன; கரையோரமுள்ள பாறைகளில் கப்பல் மோதி உடைந்துபோகுமோவெனப் பயப்படுகிறார்கள். கப்பலின் வேகத்தைக் குறைப்பதற்காக பின்பகுதியிலிருந்து நங்கூரங்களை இறக்குகிறார்கள்; அதேசமயம் சீக்கிரம் விடியவேண்டுமென்று அவரவர் தங்கள் தேவர்களிடம் வேண்டிக் கொண்டார்கள். அப் 27:28,29.

**அப் 27:30-44 வசனங்களை வாசியுங்கள். இந்தச் சம்பவத்தில் நமக்குள்ள பாடம் என்ன?**

அந்தப் பயணம் தொடங்கியபோது, நூற்றுக்கதிபதி பவுலை நன்றாகத்தான் நடத்தினான். ஆனால், கடலில் ஆபத்து இருப்பதாக முதலில் பவுல் எச்சரித்தபோது, அவன் செவிகொடுக்கவில்லை. ஆனால் இரண்டு வாரங்களுக்குப்பிறகு எல்லாமே மாறிவிட்டன. கப்பல் சேதம்பற்றி பவுல் சொன்ன தீர்க்கதரிசனத்தின்படியே நடந்துவந்ததால், பவுல்மேல் அந்த நூற்றுக்கதிபதிக்கு நல்லெண்ணம் உருவாகியது; பவுல் சொன்னபடியே இன்னும் நடக்கவிருந்தது. அப் 27:21-26.

நீந்திகரைசேருவதற்கு பெலனிருக்காது என்பதால் போஜனம்பண்ணும்படி கப்பலில் இருந்தவர்களிடம் பவுல் சொல்கிறார். தேவன் வழிநடத்தும்போது நம் கடமையை நாம் செய்யவேண்டிய அவசியமில்லை என்று கருதக்கூடாது. ‘அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்று தேவன் உறுதிகூறுகிறார்; அதைச் சாத்தியமாக்கும்விதத்தில் அங்குள்ளவர்களும் நடந்துகொண்டார்கள்; அச்சம்பவம் முழுவதிலும் இச்சமநிலை போக்கைக் காணமுடிகிறது.’’ - டேவிட் ஜே. வில்லியம்ஸ்.

விடிந்ததும், கப்பலோட்டிகள் நிலப்பகுதியைப் பார்த்தார்கள்; அது கடற்கரை மணல் நிறைந்த ஒரு வளைகுடாப் பகுதி; எனவே அந்தக் கடற்கரைப் பகுதியில் கப்பலை நிறுத்த முயன்றார்கள். ஆனால் கப்பல் கரைக்குச் செல்லவில்லை; மணல்மேட்டில் சிக்கி அலைகளின் வேகத்தால் உடைந்துபோகிறது. சிறைக்கைதிகளைத் தப்பவிடாமல் அவர்களைக் கொல்ல போர்ச்சேவகர்கள் நினைக்கிறார்கள்; ஆனால், பவுலின் நிமித்தம் நூற்றுக்கதிபதி அந்த யோசனையைத் தடுக்கிறான். இறுதியில், தேவன் வாக்குரைத்தபடியே ஒருவர்கூட மரிக்கவில்லை.

பவுலைச் சாகவிடக்கூடாது என்று நினைத்ததால்தான் கப்பலிலிருந்த சிறைக்கைதிகள் அனைவரும் உயிரோடு தப்பினார்கள். பவுலின் சாட்சியின் வல்லமையையும் அவருடைய குணத்தையும்பற்றி நாம் என்ன அறியமுடிகிறது?

செவ்வாய், செப்டம்பர் 25

## மெலித்தா

உயிர்த்தப்பிக் கரைசேர்ந்தவர்கள் அந்தத் தீவின் பெயர் மெலித்தா என்று அறிந்தார்கள்; மத்தியத் தரைக்கடல் பகுதியில் சிசிலிக்கு தெற்கே அமைந்துள்ள ஒரு சிறிய தீவு அது. கிரேத்தாவில் உள்ள நல்ல துறைமுகத்திலிருந்து புறப்பட்டு, இரண்டு வாரங்கள் கடுங்காற்றால் கடலில் இழுத்துச்செல்லப்பட்டு நானூற்று எழுபத்தைந்து மைல் தூரம் சென்றிருந்தார்கள். குளிர்காலம் முடியும்மட்டும் 3 மாதங்கள் மெலித்தாவில் தங்கினார்கள்; பிறகு புறப்படுகிறார்கள். அப் 28:11.

**மெலித்தா தீவில் பவுலுக்கு நிகழ்ந்தது என்ன? அப் 28:1-10. தேவன் எவ்வாறு அவரைப் பயன்படுத்தினார்?**

மெலித்தா தீவினர் அன்போடு அவர்களை உபசரித்தார்கள். பவுலும் அவரோடு இருந்தவர்களும் மழையில் நனைந்து, குளிரில் நடுங்குவதைக் கண்டதும், அனலடையும்படி தீமூட்டினார்கள். வருடத்தின் அந்தச் சமயத்தில் மெலித்தாவின் வெப்பநிலை 10°செல்சியஸைத் தாண்டாது.

பாம்பு கவ்வியதால் அனைவருடைய கவனமும் பவுல்மேல் திரும்புகிறது. அங்குள்ளவர்கள் தேவனை அறியாதவர்கள்; கடவுளின் சாபத்தால் பவுலுக்கு அப்படி நேரிட்டதாக நினைக்கிறார்கள். பவுல் ஒரு கொலைக்காரன் என்றும், மரணதண்டனையிலிருந்து தப்பிக்க கடலில் குதித்து நீந்தி வந்தவரை, தெய்வங்கள் தண்டித்ததாக நினைத்தார்கள். குறிப்பாக நீதியும் தண்டனையும் வழங்குவதாகக் கருதப்பட்ட டைக் என்னும் கிரேக்க தேவதை தண்டித்ததாக நினைத்திருக்கலாம். ஆனால் அப்போஸ்தலன் மரிக்கவில்லை; உடனே முன்பு லீஸ்திராவில் நடந்ததுபோல, பவுலை ஒரு கடவுளென்று புகழ ஆரம்பிக்கிறார்கள். அப் 14:8-18. பிறகு என்ன நடந்ததென்று லூக்கா விவரமாகச் சொல்லவில்லை; ஆனால், அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி அங்கிருந்தவர்களுக்கு பவுல் தேவனைப்பற்றி நிச்சயம் சொல்லியிருப்பார்.

புபிலியு என்பவர் அத்தீவின் ரோமப் பிரதிநிதியாக இருந்திருக்கலாம் அல்லது அத்தீவைச் சேர்ந்த முக்கியஸ்தராக இருந்திருக்கலாம். பவுலுக்கும் அவரோடு இருந்தவர்களுக்கும் தங்குவதற்கு நல்ல இடம் கிடைக்கிறவரையிலும் மூன்று நாட்கள் தன்னுடைய இடத்தில் அவர்களைத் தங்கவைத்திருந்தார். அவருடைய அப்பாவையும் பவுல் குணப்படுத்துகிறார்; எனவே அங்கே சுகமாக்குதலின் ஊழியத்தைச் செய்வதற்கு அது நல்ல வாய்ப்பாக அமைந்தது.

மெலித்தாவில் யாரும் மனமாறியதாகவோ, பவுல் ஏதாவது சபை ஸ்தாபித்ததாகவோ லூக்கா எதுவும் சொல்லவில்லை. தன்னை அறியாமலேயே அவர் சொல்லாமல்விட்டிருக்கலாம்; ஆனாலும் ஒரு உண்மை அங்கு வெளிப்படுகிறது. அதாவது, ஊழியப்பணி என்பது ஞானஸ்நானம் கொடுப்பதும், சபைகளை நிறுவுவதும் மட்டுமல்ல; மக்கள்மேல் கருணைகொண்டு, அவர்களுடைய தேவைகளைச் சந்திப்பதும் ஆகும். இவ்வாறுதான் நற்செய்தியானது நடைமுறை வாழ்க்கையில் வெளிப்படவேண்டும். அப் 20:35; ஒப்பிடவும், தீத்து 3:14.

மெலித்தா தீவினர் தேவனுடைய பிரமாணம்பற்றி அறிந்திருக்கவில்லை: ஆனால் தேவனுடைய நீதிபற்றி அறிந்திருந்தார்கள். அந்த உணர்வு எங்கிருந்து கிடைத்திருக்கும்? ரோமர் 1:18–20.

## இறுதியாக, ரோமில் பவுல்

மூன்று மாதங்களுக்கு பிறகு மெலித்தாவிலிருந்து பவுலும், மற்றவர்களும் பயணத்தைத் தொடருகிறார்கள். அப் 28:11. இன்று நேபிள்ஸ் வளைகுடாவில் இருக்கிற போஸஓவோலி பட்டணமான புத்தேயோலி பட்டணத்தை வந்தடைகிறார்கள். அப் 28:13. பிறகு அங்கிருந்து சாலைமார்க்கமாக ரோமுக்குச் சென்றார்கள். அப் 28:11-16.

பவுல் வருகிற செய்தி ரோமை எட்டுகிறது; அங்குள்ள விசுவாசிகள் சிலர் பவுலை வரவேற்பதற்காக பல மைல் தூரம் தென்திசையில் பயணப்பட்டு வருகிறார்கள். பவுல் இதற்குமுன் ரோமுக்குச் சென்றதில்லை; ஆனால் அவரால் மனமாறியவர்கள், சகஊழியர்கள், உறவினர்கள் என அவருக்கு பிரியமான ஏராளமான நண்பர்கள் அங்கு இருந்தார்கள். ரோமர் 16:3-16. பவுல் ஒரு கைதியாக வந்தார்; கப்பலும் சேதமடைந்திருந்தது; அந்நிலையில் அப்பியுபுரம் வரையிலும் அவரைக் காண சிலர் சென்றார்கள். தன்மேல் இவ்வளவு அன்பும் அக்கறையும் அவர்கள் வைத்திருந்ததைக் கண்டு அப்போஸ்தலன் தேவனுக்கு நன்றி கூறுகிறார்; இருதயத்தில் மிகுந்த வியாகுலமும் அடைகிறார்; ஏனென்றால், இராயனுக்குமுன்பாக அவர் விசாரிக்கப்பட வேண்டியிருந்தது.

ரோமச் சட்டப்படி தண்டனைக்கேதுவான குற்றம் எதையும் பவுல் செய்யவில்லை என்றுதான் பெஸ்து அறிக்கை எழுதியிருக்க வேண்டும். அப் 25:26, 27; 26:31,32. அதனால்தான், சிறைக்கோ இராணுவமுகாமிற்கோ அனுப்பாமல் தனியாக ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து குடியிருக்க அனுமதிக்கிறார்கள். அப் 28:30. ஆனால் அங்கிருந்த காலம்வரையிலும், ரோமச் சட்டப்படி, ஒரு காவலனோடு சேர்த்து, அவரை விலங்கிட்டிருப்பார்கள். அவர் சொந்தச் செலவில் தங்கியிருந்ததால், அவர் தன் தொழிலையும் செய்திருக்கலாம். அப் 18:3.

**ரோம் சென்றதும் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து பவுல் தங்குகிறார்; பிறகு அவர் செய்தது என்ன? அப் 28:17–22.**

ஜெபாலயத்திற்குச் செல்லமுடியாத நிலையில், விசுவாசிகளை தன் வீட்டிற்கு வரச்சொல்கிறார் பவுல். ரோமிலும்கூட முதலில் யூதர்களைச் சந்திக்கும் தன் கொள்கையில் அவர் மாறவில்லை. ரோமர் 1:16. பிறகு, கூடிவந்த யூதத்தலைவர்களிடம், தான் முன்பு செய்ததுபோலவே, தன்மேல் குற்றமில்லை என்பதை விளக்குகிறார். அதாவது இஸ்ரவேலரின் நம்பிக்கையின்நிமித்தமே தான் கைது செய்யப்பட்டதைக் கூறுகிறார். அப் 23:6; 24:15; 26:6-8. தன்னைப் பாதுகாக்க அவர் முயலவில்லை; மாறாக, இயேசுவின் உயிர்த்தெழுதல்தான் இஸ்ரவேலின் முற்பிதாக்களுடைய நம்பிக்கையின் நிறைவேறுதல் என்கிற நற்செய்தியைப் பிரசங்கிப்பதற்கு ஏதுவான ஒரு சூழலைஉருவாக்க முயன்றார். பவுலைக் குறித்து எருசலேமிலிருந்து தங்களுக்கு எந்தத் தகவலும் வராத நிலையில், அவர் சொல்வதைக் கேட்கத் தீர்மானிக்கிறார்கள்.

அந்தச் சூழ்நிலையிலும்கூட பவுல்மேல் சிலர் காழ்ப்புணர்வுடன் நடந்துகொள்கிறார்கள். அப் **28:22.** பிறர் நம் விசுவாசத்திற்கு விரோதமாகப் பேசினாலும் நம் விசுவாசத்தில் நாம் உறுதியாக இருக்க என்ன செய்யலாம்?

## நற்செய்தியின் வெற்றி

குறிக்கப்பட்ட ஒரு நாளில் யூதர்கள் எல்லாரும் கூடி வருகிறார்கள்; பவுல் நற்செய்தியைப் பிரசங்கிக்கிறார். அப் 28:23.

**இந்தச் சூழ்நிலையில் ஏசாயாவிலிருந்து பவுல் மேற்கோள் காட்டுவதற்கான காரணம் என்ன? அப் 28:24–31.**

தேவன் சொன்னதை மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தபோது ஏசாயாவில் அவ்வாறு சொல்லப்படுகிறது. ஏசா 6:9,10. சில யூதர்கள் ஏற்றுக்கொண்டார்கள்; வேறு சிலர் ஏற்றுக்கொள்ளில்லை; அதனால் மிகுந்த தர்க்கமுண்டாயிற்று; அப் போஸ்தலனும் வேறு வழியில்லாமல் புறஜாதியாருக்கு நற்செய்தியை அறிவிக்க ஆரம்பிக்கிறார். அப் 13:46,47; 18:6.

ராயனுக்கு முன்னால் பவுல் விசாரிக்கப்படுவதற்குமுன் இரண்டு வருடங்கள் செல்கின்றன. வீட்டுச்சிறையில் இருந்தாலும், தன்னிடம் வந்தவர்களுக்கு தடையின்றி அவர் நற்செய்தியைப் பிரசங்கித்தார். நற்செய்திக்கு கிடைத்த வெற்றியோடுதான் அப்போஸ்தலர் புத்தகம் முடிகிறது. எந்த யூத சக்தியாலும் ரோம சக்தியாலும் அதைத் தடுக்கமுடியவில்லை.

லூக்கா இந்தச் சம்பவத்தை இதோடு முடித்தது ஏன் என்று தெரியவில்லை. போதுமான சாட்சிகள் இல்லாததால் பவுல் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப் பட்டதற்கும், இன்னொரு நற்செய்தி பயணத்தை அவர் மேற்கொண்டதற்கும், மீண்டும் ரோமுக்கு சிறைக்கைதியாகக் கொண்டுசெல்லப்பட்டு, கொலை செய்யப்பட்டதற்கும் ஆதாரம் உள்ளது. 2தீமோ 4:6-8.

'நியாயமின்றி, நீண்டகாலம் சிறைக்கைதியாக இருக்க நேரிட்டாலும் பவுல் பொறுமையோடும் சந்தோஷத்தோடும் தைரியத்தோடும் விசுவாசத்தோடும் இருந்தது அவர் பேசாத பிரசங்கங்களாக வெளிப்பட்டன. உலகத்தின் ஆவிக்கு மாறாக அவரிடம் காணப்பட்ட ஆவியானது பூமிக்கும் அப்பாற்பட்ட ஓர் உன்னத வல்லமை அவரிடம் வாசஞ்செய்ததற்கு சாட்சியாக இருந்தது. பவுல் தன் வழக்கமான பணிகளைச் செய்யமுடியாத நிலையில், கிறிஸ்தவர்கள் தேவ நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அவரது சாட்சி ஊக்கமூட்டியது. இப்படியாக பவுலின் கட்டுகள் மிகுந்த தாக்கத்தை உண்டாக்கின, பவுலின் ஆற்றலும் பிரயாசமும் ஓய்ந்து, இனி செயல்படவே முடியாததுபோலக் காணப்பட்டாலும், அவர் வெளியேறியதுபோலத் தோன்றிய களங்களிலிருந்து அப்போதுதான் கிறிஸ்துவுக்கென்று அரிக்கட்டுகளைச் சேர்த்தார்.' – *EGW, AA, p 464.*

சபையின் ஊழியப்பணியை பொறுத்த வரையில் அப்போஸ்தலர் புத்தகம் அதாவது, நற்செய்தி பரப்புகிற வரலாறு இன்னும் முடியவில்லை; இப்போது தான் அந்த வரலாற்றில் நாம் நுழைய ஆரம்பித்துள்ளோம். நூற்றாண்டுகள் நெடுகிலும் எத்தனையோ ஆச்சரியமான அதிகாரங்கள் எழுதப்பட்டுள்ளன; சிலசமயங்களில் தேவனுடைய உண்மையுள்ள சாட்சிகளின் இரத்தத்தால் எழுதப்பட்டன. இன்னும் ஓர் அதிகாரத்தை அதோடு சேர்க்கிற பொறுப்பு நம்முடையது, அது கடைசியாகவும் இருக்கலாம். (நம்புவோம்!) இயேசு தம் சீடர்களுக்குக் கட்டளையிட்ட ஊழியப்பணியை நிறைவேற்றுவோம். 'அப்போது முடிவு வரும்' மத் 24:14.

## வெள்ளி, செப்டம்பர் 28

## மேலும் படிக்க:

'கிறிஸ்துவானவர் சபையிடம் ஒரு பரிசுத்தமான வேலையை ஒப்படைத்திருக்கிறார். தேவனுடைய கிருபையின் பொக்கிஷங்களையும், கிறிஸ்துவின் கிடைப்பதற்கரிய ஐசுவரியங்களையும் உலகிற்கு எடுத்துக்காட்டும் ஊடகமாக ஒவ்வோர் அங்கத்தினரும் விளங்கவேண்டும். தம் ஆவியையும் குணத்தையும் பிரதிபலிக்கிற பிரதிநிதிகளைவிட கிறிஸ்துவுக்கு பிரியமானவர்கள் வேறு யாருமே இல்லை. மனிதர்கள் இரட்சகரின் அன்பை வெளிப்படுத்திக் காட்டுவதைவிட இவ்வுலகத்திற்கு தேவையானது எதுவுமே இல்லை. கிறிஸ்தவமார்க்கத்தின் ஆற்றலை வெளிப்படுத்துவதற்கேற்ற ஆண்களையும் பெண்களையும் எதிர்பார்த்து பரலோகம்முழுவதுமே காத்திருக்கிறது.' – *EGW, AA, p 600.*

'சபையிலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் திறனுக்குத்தக்க ஊழியம் செய்வதற்காக சேவையின் ஆவி சபையை ஆட்கொள்ள தேவன் காத்திருக்கிறார். சபையிலும் வெளியிலும் அந்தந்த இடங்களில் தங்களுக்கு நியமிக்கப்பட்ட வேலையை தேவ சபையின் அங்கத்தினர்கள் செய்யும்போது, உலகம்முழுவதுமே சீக்கிரத்தில் எச்சரிக்கப்படும்; ஆண்டவராகிய இயேசு வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் இந்தப் பூமிக்குத் திரும்பிவருவார்.' – *EGW, AA, p* 111.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *ரோம் நோக்கிய பயணம் முழுவதிலும் பவுல் எவ்வளவு விசுவாசத்தோடு காணப்பட்டதாக லூக்கா விவரிக்கிறார்? நிபந்தனையற்ற அந்த விசுவாசம் மற்றவர்களில் எவ்வாறு தாக்கத்தை உண்டாக்கியது?*

2. *எவ்வளவோ பாடுகள் உண்டானாலும், தன் விசுவாசத்தையோ ஊழியப்பணியையோ பவுல் விட்டுவிடவில்லை. ரோமிலும் அவருக்கு அதிக சுதந்திரம் இல்லை; ஆனாலும் அவர் தொடர்ந்து பிரசங்கித்தார். 'இனி இவருக்கு நற்செய்தியைச் சொல்லக்கூடாது' என்று ஒருவரை ஒதுக்கத் தூண்டப்படும்போது நாம் என்ன செய்யலாம்?*

3. *நற்செய்தியைப் பிரசங்கிக்க, தான் கடனாளியாக இருப்பதாக பவுல் ஏன் சொல்கிறார்? ரோமர் 1:14,15. அந்த அளவுக்கு நாம் கடன்படவில்லையா? தியானியுங்கள்: 'தன்னைக் கிறிஸ்தவனென்று சொல்லிக் கொள்கிற ஒவ்வொருவருக்கும் ஆத்துமாக்களை இரட்சிப்பதே வாழ்க்கைப் பணியாக இருக்கவேண்டும். தேவன் நம்மேல் கிருபைகாட்டியிருக்கிறார், வெளிச்சத்தை வீசச்செய்திருக்கிறார், சத்தியத்தின் அழகையும் ஆற்றலையும் கண்டுகொள்ளச் செய்திருக்கிறார்; அதினிமித்தம் நாம் உலகத்திற்கு கடனாளிகளாக இருக்கிறோம்.' - EGW, 4T, p 53.*

4. *ஏசாயாவிலிருந்து பவுல் மேற்கோள் காட்டும் வசனங்களை மீண்டும் வாசியுங்கள். அது எவ்வாறு நமக்கும் பொருந்தும்? சத்தியம் அதிக அளவில் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது; அது நம் ஆசைகளுக்கோ விருப்பங்களுக்கோ முரணாக இருப்பதால் அதற்கு எதிராக நம் இருதயங்களைக் கடினப்படுத்தினால் ஆவிக்குரிய ரீதியாக எத்தகைய ஆபத்தில் சிக்குவோம்?*

5. *ஒரு காவலனோடு பவுல் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தார்? தன்னோடு கட்டப்பட்டிருந்த மனிதனிலும் பவுல் என்னத்தைக் கண்டிருப்பாரென நினைக்கிறீர்கள்?*